OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 DEC 1949
MADRAS

★ "உழவர் நாடு" ★

மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: N. S. அழகர்சாமி.

முத்துராமலிங்கபுரம், கல்லூரணி P. O.

உழவு 1	விரோதி ௵ கார்த்திகை ௴	விளைவு 5-6

பலகுடை நீழலுந்தங் குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழலவர். (குறள்)

போனது போகட்டும்

போனது போகட்டும் என்றால், காங்கிரஸ்—சோஷியலிஸ்டு களின் பிளவுகள், சோஷியலிஸ்டு—கம்யூனிஸ்டுகளின் கடும்பிணக்கு கள், பெரியார்—அண்ணாத்துரை கோஷ்டிகளின் கோபங்கள் போகட்டும், நாட்டின் நலனுக்காக இனிமேலாவது ஒற்றுமைப் படுங்கள் என்று நாம் சொல்லவரவில்லை. ஏனெனில் அவைகள் பெரிய இடத்துக்காரியங்கள், நாம் யாரைப்பார்த்துச் சொல்லு கின்றோம் எனில், கள்ளிக்குடி ரெட்டி மகாஜனசங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களையே. ஏனெனில் சுமார் ஏழு ஆண்டு களுக்கு முன் ஏற்படுத்திய "கள்ளிக்குடி ரெட்டி மகாஜனசங்கம்" ஒன்றிரண்டு வருடங்கள் ஓரளவிற்கு மகத்தான சேவை செய்து, இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கின்றதைப் போல் இருக்கின்றது காரணம் என்ன? என்று கருதிப்பார்த்தால், இச்சங்கத்தைக் கட்டி காப்பாற்றுவதால், M. L. A, M. L. C. ஆகமுடியாதே, அதுதான் போகட்டும் ஜில்லா போர்டிலாவது ஜெயித்துவிட முடியுமா? முடியாதே, என ஏங்கித்திரிகின்ற சமூகத் தலைவர் களும், ஒருசில சமூகத் தொண்டர்களும், கொண்டிருக்கின்ற தப்பான எண்ணத்தினால்தான் என்று நாம் நம்புகின்றோம்.

அவ்விதம் நினைக்கின்ற எ சமூகத்தலைவர்களே, தொண்டர்களே சமீபத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தலை, சற்றுமனதில் நினையுங்கள். ஓட்டளித்தது பல சமூகத்தார்களென்றாலும், வெற்றிக்குக் காரணம் தேர்தலுக்கு நின்ற ஆசாமியின் இனத்தவர்களின் ஒத்துழைப்பே காரணமாக இருந்தது என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. நிற்கவேறு இனத்தவர்கள் ஏற்படுத்தியிருக்கின்ற சாதிய சங்கங்கள் என்ன நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ? நமக்குத்தெரியாது. ஆனால் நமது சங்கத்தின் நோக்கம், பெரும்பான்மையாக விவசாயத் தொழிலையே மேற்கொண்டிருக்கின்ற நம்மவர்களின் கல்வியின்மையை போக்கவும், அறியாமையை அகற்றவும், கிராமத்திலேயே வாசம் செய்கின்ற நம்மவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கிராமங்களிலுள்ள கட்சி பிணக்குகளை நீக்கி, காவல்கட்டுகளை ஏற்படுத்தவும், தேசத்தின் முற்போக்கு சக்திகளுடன், காலதேச வர்த்தமானத்திற்குத்தக்கபடி நடந்துகொள்ளும்படி செய்யவும், ஆகிய இன்னோரன்ன பிறகாரியங்கள் செய்யத்தான் ஏற்பட்டது, என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இப்படி இருக்கின்ற இந்தச் சங்கத்துடன் ஒத்துழைப்பதால் எந்த காங்கிரஸ், காந்திய கொள்கைகள் கருகிப்போகின்றனவோ நமக்குத் தெரியவில்லை. உண்மையைக் கூறுமிடத்து, மகாத்மா காந்திஜீயின் கிராம சீர்திருத்த வேலையே நமது சங்கத்தின் நோக்கமாக அமைந்திருக்கின்றது. ஆகவே மதிப்புக்குரிய மாபெரும் சமூகத்தலைவர்களே, தொண்டர்களே சங்கத்திற்கென்று சற்று மனம் வைத்து, நீங்கள் அனைவரும், ஆறு ஆண்டுகளுக்கு முன் கூடி, தீர்மானித்த, தீர்மானத்தை அமுல் நடத்த ஆயத்தப்படுங்கள் ஆயத்தப்பட்டு என்செய்வது? பணம் வேண்டாமா? என்று கேட்கலாம். ஆம் அவசியம் பணம் வேண்டும். யார் கொடுப்பார்கள்? யாரை என்று கேட்கின்றீர்கள். கல்வித்துறையிலோ, மற்ற துறையிலோ தாழ்ந்த சமூகத்தார் ஆரம்பித்த சங்கங்களுக்கெல்லாம், அந்தந் சமூகத்திலுதித்த, தனவந்தர்களே பெரும்பான்மையாக பணத்தை நன்கொடையாக அள்ளிக் கொடுத்திருக்கின்றனர், என்பதை அறியுங்கள்.

சமீபகாலத்தில் சகல துறைகளிலும் முன்னுக்கு வந்திருக்கின்ற, 'நாடார்' 'நகரத்தார்' சமூகங்கள் முன்னேறி அவர்கள் போட்டதிட்டங்கள் நிறைவேற, குல தனவந்தர்களின் பணியும் பணமுமேயாகும். இப்படியிருக்க, நீங்கள் ஏன் அவ்வழியை பின்பற்றக் கூடாது. பின்பற்ருமலிருக்கின்ற உங்களை நாங்கள் மாத்திரம், எங்கள் 'தலைவர்கள்' 'முதலாளிகள்' என்று துதிபாடிக் கொண்டிருப்பதில் என்ன பொருள் இருக்கின்றது. மதிப்புக்குரிய நமது சமூக மாபெரும் தலைவர் அகத்தார்பட்டி, திரு A. K. A, இராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் காலஞ்சென்ற பிறகு, கள்ளிக்குடி வட்டகையிலேயே நம்குல தனவந்தர்களின் பணம் ஏறக்குறைய எழுபதினுயிரம் ரூபாய், எலெக்‌ஷன் சம்பந்தமாகவும் பிற சம்பந்தமாகவும் செலவழித்து இருக்கின்றது என செப்புகின்றனர் அப்படி இருக்கின்றபொழுது பணம் இல்லை என்று சொல்வதில் பொருள் இல்லை, மனம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவேதான் போனது போகட்டும் இனிமேலாவது தங்களின் இதயங்கள் கனிந்து, இசைத்த காரியத்தை இனிது நிறைவேற்ற இசையுங்கள் என்று சொல்லுகின்ருேம். இதைச் செய்ய தவறுவீர்களானல் வருங்கால குல வாலிபர் உலகம், வருங்கால தேர்தலில் தங்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கும் என பணிவான எச்சரிக்கை செய்கின்ருேம்.

வாழ்க நம் சங்கம்! வாழ்க நம் தமிழ்!! வாழ்க நம் நாடு!!!

அறிவிப்பு.

"உழவர் நாடு" பத்திரிகையின் வளர்ச்சியை முன்னிட்டு சந்தா, நன்கொடை வசூலிக்கவும் பொதுக் கூட்டங்கள் கூட்டி, வாலிபர், மாணவர், மாதர் உலகின் மறுமலர்ச்சியை எடுத்துக் கூறி தேசிய ஆக்கவேலைகட்டுத் திட்டமிடவும் நம் உழவர் நாடு ஆசிரியர் உயர்திரு N. S. அழகர்சாமி அவர்களும், மாஜி மாணவர் காங்கிரஸ் தலைவரும், இராமனுதபுரம்—மதுரை மாவட்ட ஆசிரிய மாணவர் சங்க மாஜி பொதுக் காரியதரிசியும் இளம் எழுத்தாளர் திரு P. சீனிச்சாமி (அக்னிகத்) அவர்களும் 25—12—49 முதல் 4—1—50 வரை அருப்புக்கோட்டை, சாத்தூர், திண்டுக்கல் கோவில்பட்டி, திருமங்கலம் தாலுகாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

கதரின் மாண்பு.

(பி. சி.)

1 தேசப் பசிப்பிணியைத் தீர்க்கவந்த காமதேனும்
தொழிலாளர் படுந்துயர் துடைக்கும் நம் ராட்டினமும்
சாந்த மூர்த்தி காந்தி நமக்களித்த ஆயுதமும்
சாந்தி அளிக்கவல்ல சஞ்சீவியும் கதரே.

2 தேசத்தின் மக்களுக்கு தேசியம் ஊட்டுவதும்
திவ்ய ராமராஜ்யக் கனவை நனவாக்குவதும்
பார் புகழ காந்திய உலகை உருவாக்குவதும்
பாட்டாளி வறுமையினைப் போக்குவதும் கதரே.

3 பொறுமையின் தத்துவம் புகழன்பின் உறைவிடமும்
போற்றத்தக்க அஹிம்சை, சத்தியம் பிறப்பிடமும்
செறிவுடன் காந்தி காட்டியுள்ள உயர் அன்பும்
சிறப்புடன் அளிக்கும் ஜெயச் சின்னமும் கதரே.

4 காஷ்மீரில் சால்வை நெய்த காலமகிமையும்
காசியில் நெய்த பட்டின் பொன் வேலையும்
மாசில்லா டாக்கா மஸ்லினின் மேன்மையையும்
மாண்புடன் உலகில் பரப்புவதும் கதரே.

5 பாட்டாளி வாழ்ந்திடவும் காந்தியம் பரப்பிடவும்
பாரில் உழைப்பவனே ஊதியம் அடைந்திடவும்
சுதந்திரக் கதர் உயர்ந்து சுரண்டலை நீக்கிடவும்
ஜெனித்த "உழவர் நாடு" மலர் வழி ஏகிடுவோம்

வரப்புயர ....

(பேசு)

அதிகமான் காலத்தில் தனக்குக் கிடைத்த அபூர்வ நெல்லிக் கனியைத் தான் அருந்துவதைவிட, உலகிற்கு ஆணிவேர்போலப் பதித்து அரியபெரிய அடிப்படைத் தத்துவமாகிய கல்வியறிவைப் புகட்டிவந்த பழம்பெரும் மூதாட்டியாம் ஔவையார் உண்டு, நீண்டகாலம் வாழட்டும் என்ற தூயமனதோடு கொடுத்து மகிழ்ந் தனுபவித்தான் எனக் கேட்டிருக்கின்றோம்.

கலைக்கோயிலைக் கட்ட அவ்வரசன் எத்தகைய மதிப்பிட்டு ஆதரித்தானென்றும், கலையின் கௌரவம் எத்தகையது என்றும் விளங்குகிறதல்லவா? அத்தகையவற்றினுள் பயிர்த்தொழில் ஓர் கலையாகும். ஒரு நாட்டில் பயிர்த்தொழில் எவ்வளவுக்கெவ்வளவு விரிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு முன்னேற்றமும், ஜீவனும், பெருகிறது. பொருளாதாரம் தன்னாட்டிலேயே பெருகுகிறது.

கலைமகளே ஔவையாராகப் பிறந்து நாட்டிற்குப் பணி செய்துவந்த காலத்திலே, ஓர் உழவன் குடிலுக்குச்சென்று, உண்டுகளித்து, வரப்புயர........என்று பாடினாள். இதில் எவ் வளவோ தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. விவசாயத்தின் பெருமையை, புரட்சியை, அங்கு ஊட்டுவதும் ஒன்று. வரப்புயர வேண்டுமானால் கழனிகள் சீர்திருத்தம் பெறவேண்டும். கழனிகள் சீர்திருத்தம் பெறுவதற்கு முன்னால் கண்மாய், கால்களைச் செவ் வெனத்திருத்தவேண்டும். அதற்கு உழவரின் ஊக்கம் வேண்டும். அரசியலார் உதவி வேண்டும். நீர் வாத்து. மின்சார சாதனம் வேண்டும். விவசாய முறையில் தற்போதைக்காட்டிலும் வெகு வெகு சிக்கனமானசெலவு செய்தல்வேண்டும். அப்பொழுதுதான் உழவன் உறம்பெற முடியும். அவ்வாறு வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடிஉயரும், குடிஉயரக்

கோலுயரும், கோலுயர்வு ஓர் நாட்டின் முற்போக்கு என்பதை முன்னே காட்டியுள்ளோம். என்னே ஔவையின் தொண்டு முறை. இன்று நம் தமிழ் மூதாட்டி நம்மோடிருப்பின் உழவனை யும் உடமையையும் வளர்த்து உலகினருக்கு உவமை காட்டி யிருப்பாள். தன்வாழ்நாளிலே எத்தனையோ உழவர்களை மேம் படுத்தியிருக்கிறுளென்று படித்தும் கேட்டுமிருக்கிறோம். தற் சமயம் நம் அரசியல் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில் நாம் வேண்டும் யாவற்றையும் அடைவோம் என்பது நிச்சயம், அதோ! நம் ஒப்பற்ற தலைவர் நமக்காக அமெரிக்காவிலே மூன்று வேண்டு கோள் விடுத்திருக்கிறுர். யாவரும் அறிவோம். கூடிய சீக்கிரம் அவைகளைப் பெற்று அதன் காரணமாக முன்னேற்றமடையப் போகிறோம். அதற்கு முன்னதாக நாம் செய்துகொள்ளவேண்டிய சில முதலுதவிகள் உண்டு. அவைகளையும் நாம் செய்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் டைரியானது நமது நாட்டிலே விவசாயம் செய்யப்படும் பூமி 22 கோடி ஏக்கர் என்றும் விவசாயம் செய்யப் படாமல் தரிசாய்க்கிடக்கும் பூமி 18 கோடி ஏக்கர் என்றும் கணக் கிடுகிறது. கிட்டத்தட்ட சரிபாகம் தரிசாயிருக்கிறது. நம் தமிழ் நாட்டிலே, என் நமது கிராமத்திலேயே எவ்வளவு பாசனபூமி, எவ்வளவு தரிசு என்று கணக்கரிடமிருந்து கண்டுவிடலாம். அதன் காரணம் (1) போதிய வசதியின்மையும் (2) பகற்கொள்ளையடித்த ஜமீன்தாரியும், (3) உழவர் குடிபெயர்ந்ததுமாகும், ஆனல் தற்சம யத்திலே வேண்டிய வசதிகளுக்கு அரசாங்கம் விழித்துக் கொண்டது. ஜமீன்தாரியும் ஒழிந்தது. குடிபெயர்ந்த மக்களோ திரும்பிவர மனமில்லாதிருக்கின்றனர் போலும். நாடுவிட்டு நாடு போய் முதலிட்டவர்கள் விரட்டப்படுகின்றனர். காணியில்லாத தொழிலாளி மக்களுடன் சேர்ந்து கொண்டதால்....ஆட்குறைப்பு என்ற காரணங்காட்டிக் கதவடைக்கின்றனர். ஆடம்பர நடவடிக் கையைக் கைக்கொண்டு உள்ளதையுமிழந்து வாடுகின்றனர். இன் றைய நிலைமையில் நகரங்களிலே பார்த்தால் குடிபெயர்ந்த ஏழை விவசாய மக்கள் இதர தொழிலில் தக்க வருவாயின்றி, கடும் உழைப்பால் உடலையும் கெடுத்துக் கொண்டு, இருக்க இடமின்றித்

தவிக்கும் காட்சி மிகக் கோரமாயிருக்கிறது. ஆனால் அதே நிலையில் கிராமத்திலுள்ள ஏழை விவசாயியை நோக்கின் எளிய வாழ்வில் ஏதோ பயிரிட்டு, உடைமையைப் போற்றி, கிடைத்ததைக்கொண்டு ஓரளவு திருப்தியடைந்து வருகிறான். இந்த உணவுப் பங்கீடு காலத்திலும்கூட ஓர் விவசாயி உணவின்றி வாழ்கிறான் என்று சொல்வதற்கில்லை. ஆனால் எட்டாளவிலே இருக்கலாம். ஆகவே நாம் செய்துகொள்ளவேண்டிய முதலுதவியாவது முதன்முதல் நகரங்களிலே காணியில்லாது தொழில் துறையில் ஜீவிக்கும் தொழிலாளிகளுடன், காணியுள்ள மக்கள் போட்டியிடுவதை திருத்தி, விவசாயத்திலீடுபடத் திருப்ப வேண்டும். அண்டை, அயல் நாடுகளிலே முதலிட்டுவரும் முதலாளி, விவசாயப்பெரு மக்கள் தம் நாட்டிற்குத் திரும்பவேண்டும். தங்களது முதலை விவசாயத் துறையிலிடுத்தல் வேண்டும். ஏழை விவசாயிகளை ஆதரிக்கவேண்டும். தரிசாய்க்கிடக்கும் நிலங்களைச் சோம்பலின்றி திருத்தவேண்டும். ஆங்காங்கு வசதியுள்ள இடங்களில் கூட்டுப் பண்ணைகள் அமைக்க முன் வரவேண்டும். கழனி, கால், நீர்வாரத் துக்களைச் செப்பனிட அரசாங்கத்தைத் தூண்டவேண்டும்.

பகீரதன் கங்கையைக் கொண்டுவந்தது போல, நீர்வள மில்லா இடங்களுக்கு தண்ணீர் கொண்டுவர அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும். ஆரம்பத்திலிருந்தே சிறுவர்களுக்கு விவசாயத்தில் ஆர்வமூட்டி, ஆதாரக்கல்வி புகட்டவும், அதன் மூலம் உத்தியோகத்திற்கென்றில்லாமல், உயர்ந்த படிப்பு வரை கல்வியைப் புகட்டி, அறிவுக்குத்தக்கபடி தொழிற்துறைக்கு வாய்க்கால் வகுக்கவும் வேண்டும். பத்திரிகைகளிலே அவ்வப் போது வெளியிடும் விவசாய நிபுணர்களின் ஆலோசனையை ஏற்க வேண்டும். நம்மைத் தேடிவரும் உத்தியோகஸ்தர்களுக்குத் தேவை யான வழிகளைக் காட்டி ஆதரவுகொடுத்து வேண்டியவை பெறத் தயாராயிருக்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில் அரசாங்கமும், மக்களும் ஓர்முகப்பட்டு, வசதிகளைப்பெற்று, வாழ்வைக்கற்று, ஔவையின் வாக்கை அமுதமெனப் போற்றி, உழவர் நாட்டை ஊக்கி, கழனியைத்திருத்தி, காவலைப் பெருக்கி, மேழியைத் தூக்கி மேதினியை ஏத்தி, உலகம் போற்றும் உத்தமரின் நிர்மாணத் திட்டப்படி நம்நாடு முன்னேற்றமடைந்து வரப்புயர்ந்து வாழ நாம் கற்றுத் திருந்துவோமாக. ஜெய் ஹிந்த்.

சென்ற மாதத் தொடர்ச்சி........

உழவர் பெருமக்களுக்கு............

(வீ. அருணாசலம். கல்லூரணி.)

நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த கலப்பையை வைத்துக் கால்குருக்கம் உழுது கால்வயிற்றுக்குக் கஞ்சி குடிக்கும் காலம் மாறின அன்றே நம் வாழ்வும் உயரும் தற்காலத்தில் விவசாய சம்மந்தமாக உழுவதற்கும், விதைப்பதற்கும், அருகு வெட்டுவதற்கும், தண்ணீர் இறைப்பதற்கும் நூதனக்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு, மேல்நாடுகளில் அனுபவத்தில் இருந்தும் கூட, நம்நாட்டில் பெரும்பான்மையோர் அதன்பயனை அறியாதது அறிவின்மையே யாகும். ("Old order yieldes to place to new one") என்ற ஆங்கிலப் பழமொழிக்கிணங்க பழைய கருவிகளை விட்டு விட்டுப் புதுக்கருவிகளுக்கு இடங்கொடுப்பதே நலமாகும்.

பொருளாதார நெருக்கடியினாலும், அறியாமையினாலும், பெரும்பான்மையான விவசாயிகள் பயனற்ற கருவிகளைச் சொற்ப விலைக்கு வாங்கி, அதை உபயோகிக்கும் காலத்தில் அதிகமாகப் பணத்தைச் செலவு செய்து விரயம் செய்கின்றார்கள். உதாரணமாக வண்டி ஒன்று குறைந்தது முன்நூறு ரூபாய்க்கு வாங்குவதற்குப் பதிலாக அறுபது அல்லது எழுபது ரூபாய்க்கு வாங்கி, அதை உபயோகிக்க ஆரம்பித்தது முதலாகச் செலவு செய்து கொண்டே இருப்போமேயானால் பணவிரயம்தான் ஏற்படுகின்றது. அதற்கு முதலாவதே நல்ல கிலையில் உள்ள வண்டியை வாங்கி விட்டால் பணம் நஷ்டம் ஏற்படாதல்லவா? இவைகளெல்லாம் அறியாமையால் ஏற்படுகின்றனவேயன்றி வேறல்ல.

தங்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும், தெரிந்தவர்களிடமோ அல்லது ஆங்காங்கேயுள்ள, விவசாய சம்பந்தமான ஆபீஸுகளுக்குச் சென்று, அங்குள்ள விவசாய சம்பந்த விளக்க அதிகாரி (Agriculture Demonstrator) யையோ கேட்டுச் செய்வது சாலச்சிறந்தது.

இறுதியாக பாட்டாளி மக்களை அடிமைப்படுத்துவது கடன் தொல்லையாகும். சுபகாரியமானாலும், அசுபகாரியமானாலும், காடு வாங்கவேண்டுமானாலும், வீடு, மாடு வாங்கவேண்டுமானாலும், கிணறு தோண்டவேண்டுமானாலும், கடன் வாங்குவது வயலில் உள்ள கடலையையோ, பருத்தியையோ, கிழங்கையையோ நம்பி, உனக்கு நான் கடலை போடுகிறேன்; கிழங்கு போடுகிறேன் பருத்தி போடுகிறேன் என்று சொல்லிக் கடன் வாங்கி, அது சரியான பலன் தராவிட்டால், வட்டி பெருகி, கடைசியில் நிலத்தையே விற்றுக்கொடுக்கும் நிலைமையில் நம்மை கடன் தொல்லை செய்துவிடுகின்றது. கடன் இல்லாமல் கால்வயிறு போதும்என்று எண்ணும் நாளே நன்னாள்.

ஆகவே பெருமக்களே! நீங்கள் அனைவரும் கல்விபயின்று கருத்தைச் செலுத்தி, கலப்பையைப் பிடியுங்கள். பழமையான கருவிகளுக்கு ஓய்வுச் சீட்டு கொடுத்துவிட்டு, புதிய கருவிகளைப் பூரண மனதோடு ஆதரியுங்கள். கடன் என்ற காலனை, கைலாசம் என ஒன்றிருந்தால் அங்கே அனுப்பிவையுங்கள். அல்லது ஆழக் குழிதோண்டி அதிலே புதைத்து வையுங்கள். விவசாய சம்பந்தமாக சந்தேகம் ஏற்பட்டால். அதற்கென உள்ள அதிகாரிகளிடம் சென்று யோசனை கேட்டு, அதன்படி செய்யுங்கள். மாட்டுச் சாணத்தை எறிப்பதை விட்டு விட்டு, சாணத்தை குப்பை கூளத்துடன் சேர்த்து வாரிக் கொண்டுபோய் ஒரு இடத்தில் கொட்டி, அதன்மேல் மாட்டு மூத்திரத்தை ஊற்றினால், அதைப்போல் வேறு எதுவும் நல்ல உரமாக இருக்க முடியாது. முற்போக்கான நோக்கம் உடையவர்களாக இருங்கள். உங்கள் க்ஷேமத்திற்கு விவசாய கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுங்கள்.

"வரப் புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும,
நெல் உயரக் குடி உயரும்,
குடி உயரக் கோல் உயரும்,
கோல் உயரக் கோன் உயர்வான்."

ஆகையால் குடி மக்களாகிய நாம் விஷேசமாக விவசாயிகள் உயர்வடைந்தால்தான் நாடு நல் நிலையடையும். ஆகவே அனைவரும் ஒருமுகப்பட்டு, நாட்டை நல்ல நிலையில் கொண்டுவந்து உலகிலே உன்னத நாடு, நம் இந்தியா தேசம் என்று அனைவரும் கொண்டாடும் அளவுக்கு நம் நாட்டை நலனுறச் செய்வோமாக.

(வணக்கம்.)

கடவுள் யார் பக்கம்?

"செல்வன்" கொல்லம்.

"நாடு பூராவிலும் பஞ்சம் பஞ்சம் என்று பிலாக்கணம் பாடுகிறார்கள். உற்பத்தியைப் பெருக்கும்படி மூலைக்கு மூலை உபதேசம் செய்கிறார்கள். ஆளுக்கொரு யோசனை சொல்கிறார்கள் உற்பத்தியைப்பெருக்குவதுயார்? இரண்டடிவீதியில் 'பெல்ட்'டை விரித்து இறுக்கித் தொந்தியைக் குறைக்கப் பாடுபடுகிறார்களே அந்த முதலாளிகளா அல்லது மூலைத் தெருமுடுக்கிலே பண்டக சாலை வைத்து மூவர்ணக் கொடி உயர்த்தி 'இரவு பேரம்' செய்யும் அந்தக் கண்ணியமுள்ள கனவான்களா? அல்லது எழை விவசாயிகளா? யார் பெருக்குவது? உற்பத்தியைப் பெருக்குவதுயார்?" ஒருநாள் தினசரியைப் பார்த்து விட்டு இவ்வாறுதன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டான் அப்பளசாமி என்கிற அய்யாத்துரை. கொஞ்சநாளாகத்தான் இவனை இந்தக்கவலை வாட்டிக்கொண்டிருந்தது.

அய்யாத்துரைக்குப் பனப்பாளையத்தில் எட்டுக்காணி நிலமிருந்தது அதை எதோ தவிர்க்க முடியாத காரணத்தால் அந்தஊர் முடிசூடா மன்னர் ராவ்பகதூர் தசகண்டத் தேவரிடம் அடமானமாக வைத்துக் கொஞ்சம் பணம் வாங்கியிருந்தான். இப்போது தேவரின் பண்ணையில் அவரது அபிமானமுள்ள ஊழியர்களிலே ஒருவனாகயிருக்கிறான்.

ஸ்ரீமான் தசகண்டத் தேவரைப்பற்றி நாம் இந்த இடத்தில் கொஞ்சம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அவரது 'திருவிளையாடற் புராண'த்தின் ஓர் எடுதான் இந்தக் கதை. ஆதியில் தேவரின் பெற்றோர்கள் அவருக்குச் சூட்டிய திருநாமம்

எதுவானாலும் இப்போது தசகண்டத் தேவர் என்பதே அவர் பெயர். 'இராமாயணத் தேவர்' என்ற பட்டப் பெயரும் அவருக்கு அவ்வூரில் ரகசியமாக வழங்கப்பட்டு விட்டது. இது அவருக்குச் சூட்டப்பட்ட காரணப்பெயரா? அல்லது சிறப்புப் பெயரா? என்பது நமக்குத்தெரியாது. அவரது ஜனன பூமி இன்ன இட மென்று நாளதுவரை யாருக்குமே தெரியாது. கொஞ்ச காலத்துக்கு முன்னால் தமது தேவியார் சகிதம் பனம்பாளையத் திற்கு விஜயம் செய்த தேவர் பிறகு அங்கேயே ஆணிவேரைப் பாய்ச்சிக் கொண்டார். அதற்குப் முன்னுள்ள கதை நமக்கு வேண்டாம். இப்போது பனம்பாளையத்தில் ஒரு இரண்டடுக்கு பங்களாவுக்கும், அந்த ஊரிலுள்ள பாதிக்குமேற்பட்ட நிலங்க ளுக்கும் சொந்தக்காரராகத் தம்மைச் சீர்திருத்திக் கொண்டிருந் தார் தேவர். சொந்தத்தில் பெரிய ஒரு வியாபாரம் செய்து பகல் இரவு என்ற பேதமின்றி அதில்வேறு சம்பாதித்தார்.

முகத்தில்சதா நகை தவழுமானாலும் ஆள் 'பெரியபேர்வழி' என்பது முதல் நோட்டத்திலேயே விளங்கும். எந்தக் கொடாக் கண்டனாயினும் விடாக்கண்டனாயினும் சரி, தம்மோடு ஒத்துவரா விட்டால் தூக்கி எப்பம் விட்டுவிடும் சுபாவம். இதனால் தானே என்னவோ 'இராவணேசுவரத் தேவர்' என்று கூட அவரை விஷயமறிந்த ஒருசிலர் சொல்லிக் கொள்வதுண்டு. பார்க்கப் போனால் அவர் பெயரைப்பற்றி புராணமே பல ஏடுகளில் அடங்கும்.

எடுத்தகாரியம் யாவினும் வெற்றி பெறும் திடமும், பக்க பலமும் எதற்கும் தளராத உறுதியும் பெற்ற தேவருக்கு ஒரு விஷயத்தில் மட்டும் எதிர்பார்த்தபடி தகுந்த பலன் கிட்டவில்லை. எப்படியும் ஒரு திவான்பகதூராகவாவது ஆகிவிடவேண்டு மென்று பாலியத்திலேயே அவர்கட்டிக் கொண்டகங்கணம் வய தாக ஆக இறுகிக்கொண்டே வந்தது. பெரிய உத்தியோகஸ்தர் களையும் மேலிடத்தவர்களையும் பழக்கம் பிடித்து எத்தனையோ வருஷகாலமாக விருந்துகளும் 'பார்ட்டி.'களும் நன்கொடைகளு

மாகக் கொடுத்து பிரம்மப் பிரயத்தனம் செய்திருந்தார். இன்னும் எவ்வளவோ செய்தார். இவற்றுக்கெல்லாம் சேர்த்து மொத்தத்தில் 'காக்காய் பிடித்தார்' என்று ஒரே வார்த்தையில் சொல்லப் போனல் அது அவ்வளவாக அவருக்குப் பொருந்தாது. சில வருஷங்களுக்கு முன்னுல்தான் தேவருக்கு 'ராவ்பகதூர்' கிடைத்தது.

அன்றிலிருந்து அவருக்கு ஊரார் தம்மை தசகண்டத் தேவர் என்றோ இராமாயணத் தேவர் என்றோ பெயரிட்டு அழைப்பதில் துளிக்கூட விருப்பமில்லை. 'ராவ்பகதூர் எசமான்' என்றே தம் பெயரை மாற்றிக் கொண்டார். தம் சொத்தில் பாதிக்குமேல் செலவழித்தும்கூட இந்தப் பெருமையாவது சித்திக்கா விட்டால் அதனுல்தான் வேறு என்ன பிரயோசனம்? முதலில் 'ராவ்பகதூர் எசமான்' என்ற இந்தக் கௌரவப் பெயரை இட்டு அழைக்கும்படியே தம் பண்ணையாட்களைப் பழக்கினர். அவரது பண்ணையில் புதிதாகச் சேர்ந்த அப்பளசாமிக்கு மட்டும் இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. அந்தப்பெரைப் மனதார அவன் வெறுத்துத் தள்ளியே வந்தான். வண்டி குடை சுவிழாமல் தாங்கி நிற்கும் தாங்கல் போல் நெடுநாளாகப் பணிபுரிந்துவந்த தேவரின் இரண்டடி வீதியுள்ள கனத்த 'பெல்ட்'டும் சரிகைத்துப்பட்டாவும், முறுக்கு மீசையும் அவனுக்கு வேம்பாகக் கசந்தன. ஆனல் தேவரோ அவனைச் சட்டைசெய்யவே மாட்டார். ஏளனமாக அடிக்கடி நகைப்பார் அவனைப்பார்த்து. அதுதான் அப்பளசாமிக்கு பொறுக்கமுடியாத தாங்கலாகவிருந்தது. இந்த மாதிரிச் சமயங்களில் அவன் 'இருக்கட்டும்' என்று தன் அப்பளக் குடுமியைத் தடவிக் கொண்டே உள்ளுக்குள்ளே கருவிக் கொள்வான். அவன் தேவர் மீது கோபம் கொள்ளும் சமயத்தில்தான் ஆரம்பத்தில் கூறியது போல் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வான். வேறு அவனுல் என்ன செய்ய முடியும்? அவர்தான் எமகண்டத் தேவராச்சே!

ராவ்பகதூர் திடீரென்று தம் இரண்டாவது பெண்ணுக்கு விவாகம் நிச்சயித்தார். பக்கத்து டவுன் மாஜிஸப்மாஜிஸ்டிரேட்டின் பிள்ளைக்கு நிச்சயமாயிற்று. இன்னும் இரண்டு வாரத்தில் கலியாணம் நடக்கவிருந்தது. அப்போதிலிருந்தே ராவ்பகதூரின் பண்ணையாட்களும் தேவருடன் இணைந்து அங்கே போவதும் இங்கே ஓடுவதும், அதைக் கவனிப்பதும் இதைச் செய்வதுமாக

ஜரூராக வேலை செய்தனர். ராவ்பகதூரின் இந்தத் திடீர் ஏற்பாட்டினால் அவ்வளவாக ஊரில் பரபரப்பு உண்டாகவில்லை. என்னவானாலும் தேவரின் பண்ணைக்காரியங்களைப் பற்றி ஊராருக்குத் தெரியாமலாயிருக்கும்?

சுமார் ஒரு வாரத்திற்கு முன்னாலிருந்தே பக்கத்து ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பந்துக்களும் நண்பர்களுமாக வந்து பங்களாவில் குவிய ஆரம்பித்துவிட்டனர். தேவருக்கு ஒரே கவலையாகிவிட்டது. இவர்களையெல்லாம் எப்படிச் சமாளிப்பது என்பதற்காகவல்ல, தமது அருமை மகளின் திருமணம் மகோன்னதமாக நடைபெறவேண்டுமே என்பதால்தான் இந்த விதமான கவலை அவருக்கு உண்டாக முகாந்திரம் இருக்கத்தான் செய்தது.

ராவ்பகதூருக்கு இரண்டு பெண்ணும் நான்கு பிள்ளைகளும் மூத்த பெண்ணை இரண்டு பிள்ளைகளுடன் பக்கத்து டவுனுக்குப் படிக்க அனுப்பியிருந்தார். போன இடத்திலே பெண்ணுக்கு தன் கூடப்படித்துக்கொண்டிருந்த ஒரு பையனைக் கொஞ்சம் பிடித்தாற்போலிருந்தது. முதல் தடவையாக இவள் அவனைப்பார்க்கவும் அவன் மெல்லச்சிரிக்கவும் பிறகு இவள் முகத்தைக் கவிழ்த்துக்கொள்வதுமாகப் பரிசயம் ஆரம்பித்தது. இருவரிடையே வளர்ந்த நேசம் சிறிது காலத்தில் 'காதலாக'ப் பரிணமித்து விட்டது! கடைசியில் அவனையேதான் கலியாணம் செய்துகொள்வதாக ஒற்றைக்காலிலே நின்றாள் தேவரின் குமாரி ராவ்பகதூர் தமது அந்தஸ்தையும் கௌரவத்தையும் முன்னிட்டு, முதலில் இதமாகவும் பின் அழுத்தமாகவும் முடிவில் கடுமையாகவும் கண்டித்து மகளுக்குப் புத்திமதிகூறி, இறுதியில் மறுத்துவிட்டார்

'எவனோ கூடப்படித்த ஒருபயலைப் பயலை மகளுக்குக் கட்டிக் கொடுப்பதாம்! ஹூம், எவ்வளவு அந்தஸ்துக் குறைச்சல் நமக்கு! பட்டம் பெற்ற கௌரவம் இதிலா பறிபோவது? என்னவோ படிப்பாம் காதலாம், என்னவேண்டிக்கிடக்கு காதலும் ஊதலும், நமக்கும் காதலுக்கும் ஒத்துவருமா? ஹூம், காலம் தெரியாத பைத்தியக்காரப் பொண்ணு!........ என்றுதான் அவர் நினைத்தார். மறுதினமே பெண்ணின் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்தும் தம் மூத்த பையனுக்கு, கோகிலாவை உடனே அழைத்து வரும்படி, ஒரு தந்தி கொடுத்தார். ஆனால் பாவம், மறு தந்திவந்த வேகத்தில் அது அவர் அந்தஸ்தில் மண்ணைத்தூவிச் சென்றது. அதில், கோகிலாவும் அவள் காதலனும் கலாசாலைக்கு வந்தே இரண்டு நாளாகிவிட்டதாகக் கண்டிருந்தது. (தொடரும்)

சென்ற மாத தொடர்.........

யார் மனிதன்?

P. ராமசாமி

மனிதன் குணம் ∴ புத்தகப்படிப்பு ∴ பூமியாராய்ச்சி.

எகிப்து நைல்நதி பள்ளத்தாக்கில் வெள்ளரி விளைவிக்கிருனே அப்துல்லா! அதோ துள்ளி விளையாடும் குழந்தையை வைத்துக்கொண்டு அது மனித இன்பம்.

வங்காள நிலக்கரிச் சுரங்கவாசி நரேன்பாபு அதோ அந்த மேட்டிலுள்ள சால விருக்ஷத்தினடியில் காய்ந்த ரொட்டியை காதலி கையிலிருந்துவாங்கி புட்டுத்தின்கிருனே அந்தச்சொக்கிலே! அது மனித இன்பம்.

யோக்காமா துறைமுகத்தில் அதோ மூட்டை தூக்குகிருனே ஸுக்கியாஸ்கி. அவன்மதிய நேரத்தில் தன் கண்ணாட்டி கொண்டுவரும் கஞ்சியைக் குடித்து காணுவது மனித இன்பம்.

அதோ! பம்பாய் லண்டிபஜாரில் ஆடையை நெகிழவிட்டு மார்பை முன்னேகாட்டி, முகமினுக்கி, போலிப் புன்னகையுடன், பாபுஜீ! இதர் ஆபியே என்கிருளே! கேவலம் ஒருச்சாண் வயிற்றை நிரப்ப அது மனித இன்பம்.

அதோ பல்லாரி கட்டாந்தரையிலே ஆடு மேய்க்கும் அண்ணன் வேகா வெயிலிலே பாறை அடியிலே அமர்ந்து ஒரே நாயினு, ஆகொறலனு இல்ல தோலுரா என்று கூறிவிட்டு சுகநித்திரை போகிருனே! அவன் அனுபவிப்பது மனித இன்பம்.

மலைசூழ்ந்த மலையாளம். கண்ணும் கருத்தும் ஒருங்கே பதியுமிடம். அந்தக் குடிசையில் அருமைக் காதலியுடன், ஞான் பறஞ்ஞது அதே ஞீ கஞ்சிவெள்ளம் கொண்டு வரீயூ என்று கொஞ்சுகிருனே அது மனித இன்பம்.

அதோ லங்காஷயர் மில், அதோ அந்த ஆண் பெண் தொழிலாளிகளின் சிரிப்பொலி அதில் மிதக்கிறதே அது மனித இன்பம்.

பெருமைமிக்க ஜனநாயக பிரான்சின் தலைநகர் பாரிஸ். அதோ அந்த அழகிய சீமாட்டி, இல்லை, இல்லை. கண்டோரை மயக்கும் கண்ணாட்டி. அவளைக்கண்டு கண்ணை மூடாமல் பார்க்கிறானே கருப்பு சமஸ்தானாதிபதி அவன்காண்பது மனித இன்பம்.

அதோ போர்டு கம்பெனி தொழிற்சாலை $4\frac{1}{2}$ லக்ஷம் மக்கள் கொண்ட நகரிலே 3 லக்ஷம் கார்கள். தொழிலுக்கு சுணக்கமில்லாமல் சொந்தக் கார் உபயோகிக்கிறான் தொழிலாளி அவன் அடைவது மனித இன்பம்.

பனிக்கட்டி வீடு, கரிபூமான், எலும்புப்படகு எஸ்கிமோ ஜாதியார். தோலுடை. அதிலும் அவன் மனித இன்பம் காணுகிறான்.

ஒன்றும் விளையா மஞ்சூரியாவிலே ஒய்யார வாழ்வு வாழ்கிறான் கிர்கீஸ் ஜாதியான். அனல் கொதிக்கும் சகாராவில், சகாராவாசி ஆனந்தம் காண்கிறான். அமானுல்லா.

காங்கோ பிரதேச நீக்ரோ களகுசி அடைகிறான் அது அவன் இன்பம்.

பாசிபிடித்த கொள்கை கொண்ட ரோம், இன்று பலி சிழந்து நிற்பதிலும் ஒரு இன்பம்.

ஆரியனென்று வீறுகொண்டே வீர ஜெர்மனி அடைந்ததும் ஒருவகை இன்பம்.

மனிதன்வாழவே பிறந்தான் என்றமார்க்ஸ் சித்தாந்தத்தை பிரகாசிக்கச் செய்யும், மனிதத்தன்மை கொண்ட மாஸ்கோ அடையும் இன்பம்.

கேப்டவுன் முதல் கெய்ரோ வரையும் ஒரே தொடர் இரும்பு வண்டி மனிதன் செயல்?

ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குக்கரையிலிருந்து மேற்கே பஸிபிக்வரையும் செல்லும் தண்டவாள வண்டி மனிதன் செயல்.

பால்டிக்கடல் முதல் கிளாடி வாஸ்டாக்வரை ஆறாயிர மைல் அரிய வேலை மனிதன் செயல்.

ஆழ்கடலில் ஆயிரக்கணக்கான மைல் ஆவென்ற ஆழியில் பிளந்து செல்லும் அழகிய கப்பல், மனிதன் செயல்.

84மைல் கடற்கரை மணலை செம்மைப்படுத்தி செங்கடலையும், மத்தியதரைக்கடலையும், ஒன்று சேர்த்த சூயஸ்கால்வாயை உண்டாக்கியது மனிதன் செயல்.

உயர்ந்த அட்லாண்டிக் கடலையும், ஆயிரக்கணக்கான அடிகள் தாழ்ந்துள்ள பசிபிக்கடலையும் இணைக்கக்கட்டிய பனாமாக் கால்வாய் மனிதன் செயல்.

லண்டனுக்கும், கன்னியாகுமரிக்கும் உடனுக்குடன் உளவு தெரிவது மனிதன் செயல்.

பலபுதையுண்ட இயற்கையின் சக்திகளை தூண்டித்துருவி, மனிதனுக்கு சாதகமாக்குவது மனிதன் செயல்.

அவனன்றி அணுவும் அசையாது என்றும் மூட நம்பிக்கையை நம்மிடையேபுகுத்தி, நம்மை நம்பச்செய்து, அவனவன் என்று எடுத்ததற்கெல்லாம் கூவச் செய்வதும் மனிதன் செயல்.

சீனக்குடியானவனும், எகிப்திய வெள்ளரி விவசாயியும், அராபிய நாடோடியும், தூந்தரப் பிரதேசவாசி எஸ்கிமோவும், காங்கோவாசி நீக்ரோவனும் அநுபவிப்பது மனித இன்பமாயினும் அங்கும் இந்த மன்னர் அவதாரங்கள் என்ற மண்பொம்மைகள் அவன் இன்பத்தையும் துன்பமாக்குகின்றனர் அங்கும் சுரண்டல் அங்கும் கொள்ளைக்கூட்டம் அங்கும் ஏழை திருடன் என்ற பெயர்கள் இடம்வேறு, இருக்கவேறு, நடத்தைவேறு, உணவு வேறு, உடைவேறு, ஆனல் சுரண்டும் கூட்டம் ஒன்று அவனுக்கு அனுமதிசெய்யும் தெய்வம் ஒன்று

சற்றுநாம் உலகை உற்று நோக்குவோமாயின் எங்கும் இருதிறப்பட்ட சக்திகள் இயங்குவது தெரியும் ஒன்று சுரண்டும் சக்தி மற்றொன்று சுரண்டப்படும் சக்தி எங்கும் சுரண்டும் சக்தி கட்டுப்பாடாக பாமரர்களை சுரண்டிக்கொண்டு தானிருக்கின்றது. உணவு, உடையில் உலகில் பலதிறப்பட்டாலும், உயிரிலும், உறிஞ்சலிலும் ஒன்றாகவே இருக்கின்றன. (தொடரும்.)

சடுதியில் செய்யவேண்டிய ::
:: சர்க்கார் கடமை.

(வி. எஸ்.)

உலக நாடுகளுடன், நம்நாடு, சீரும் சிறப்பும். உயர்வும் மேன்மையும் இன்னும் பலதுறைகளிலும், சிறப்புடன் விளங்க வேண்டுமாயின் இன்று நம் நாட்டு மக்களிடையே மலிந்து காணும் நீண்ட நாளாய் ஊறிப்போன அறியாமையை அகற்றவேண்டும். அறியாமை அகல, அறிவு தெளிதல் அவசியம், அறிவு தெளிதலுக்கு யாவரும் கல்வி கற்றாகவேண்டும். இது தவிர்க்கமுடியாது, யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

“கல்வி” என்றால் இன்று நம் நாட்டுக் கல்விச்சாலைகளில் கற்றுக்கொடுக்கப்பட்டுவரும் உதவாக்கரைக் கல்வியா! இந்தக் கல்வி, அறியாமையை அதிகப்படுத்தி, என்றென்றைக்கும் நம்மை மீளாத அடிமை வாழ்க்கையில் ஆழ்த்திவிட, அருந்துணை செய்து வந்த, அன்னிய நாட்டான் விட்டுச் சென்ற அடிமைக் கல்வியல்லவா!

இந்தக் கடை கெட்டக் கல்வியைக்கூட நம்மில் எத்தனை பேர் கற்றிருக்கிறார்கள்? அறைகுறையாகக் கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களையும் சேர்த்து, நூற்றுக்கு பதிமூவரெனப் பகருகின்றனர், பரிதாப நிலையுடன் நம் நாட்டின் அறிஞர்கள் பலர். இது நாம் சிந்திக்கவேண்டிய நிலைமட்டுமல்ல, வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையுமாகும், கல்வித் துறையில் நாம் முன்னேறாத வரை மற்றைய நாட்டாருடன் தலைநிமிர்ந்து நிற்போம் என்பதெல்லாம் வெறும் பகற் கனவேயாகும். ஏனெனில், அறிவு எனப் படும் வானிற்கு, ஒளிதரும் “முழுமதி” போன்றது “கல்வி.”

இந்நிலையில், நம் நாடு பழம் பெரும் நாடு, முன்னாளில் உலக நாடுகளிலெல்லாம் சிறந்த நாகரீகம் பெற்று, முதன்மை

ஸ்தானம் வகித்த உன்னத நாடு என, நம் நாட்டின் முன்னாள் பெருமையைப்பற்றிப் பேசிப் பெருமையடைந்து கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இன்னாள் நாமிருக்கும் சிறுமையைக் கவனியாது, முன்னாள் பெருமையைப் பேசுவதால் பயனென்ன காணமுடியும்? நம் பழம் பெருமையை மீண்டும் அடைய வழியென்னவென்று சிந்தித்துப் பாராது, பழம் பெருமை பேசியாவதென்ன! இன்று நாம் முன்னேற வழி என்ன? நாம் அரும்பாடுபட்டுப் பெற்ற நம் சுதந்திரத்தைக்காக்க வழி என்ன? இது தான் சுதந்திரமடைந்தவுடன் எந்த நாடும் உடனடியாக சிந்திக்க வேண்டிய முதல் கடமை. சுதந்திரம் பெற்றவுடன் முதலில் கவனிக்கவேண்டியவைகளில், முக்கியமானதும். முதன்மையானதும் கல்விதானெனச் சரித்திரம் அறிவிக்கிறது. ஆகையால் நம்நாட்டுப் பட்டி தொட்டிகளிலெல்லாம் கல்வி மணம் வீசப் பாடசாலைகளைப் பல திறந்து, கடமையாற்றவேண்டும் நம் சுதந்திர சர்க்கார்.

கல்வியைப் பற்றி கல்வி அமைச்சரும், கல்வி இலாகாவும் பல இடங்களில் பலதடவைக் கூடிக் கலந்தும் பல-பல விவாதங்களை செய்து விட்ட விபரம், பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வந்து விட்டால் மட்டும் போதுமா? வாயளவிலும் ஏட்டளவிலும் திட்டங்களை தீட்டி விட்டால் தீர்ந்துவிடுமா கல்விப்பிரச்சனை? திட்டங்கள் ஏட்டளவில் உள்ளவரை நாட்டில் நன்மைகாண முடியாது.

"கட்டாயக் கல்வியைப் பற்றிப் பேசப்படுகிறது." சில முக்கிய நகரங்களில் அமுலாக்கும் முறையும் கையாளப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. செய்ய வேண்டியதுதான். ஆனால்! நகரங்களிலுள்ள அநேக பாடசாலைகளில் "சிப்ட்டு" முறை கையாண்டும், இடம்காணவில்லையென்றே தெரிகிறது. பாடசாலைகளில் இடம் போதாத நிலையிலும், பல கிராமங்களில் பள்ளிகளே இல்லாத நிலையிலும் கட்டாயக் கல்வியைப் பற்றிக் காரசாரமாகப் பேசிப்பயனென்ன?

ஆகவே எங்கும் நீக்கமற நிறையக் கிராமங்கள் தோறும் பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். திறந்து விட்டால் மட்டும் போதுமா? இன்றையக் கல்வி முறையும் மாறவேண்டும். மேலும், சாதிமதப் பாகுபாடு பாராமலும், ஏழை பணக்காரனென்ற வித்தியாசமில்லாமலும், யாவருக்கும் சமத்துவமாகவும், இலவசமாகவும் கல்விப் போதிக்கப்படவேண்டும். இவ்விதியைச் செய்து சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும். ஏனெனில் வறுமையே தன் உடன் பிறப்பாகக் கொண்ட எத்தனையோ ஏழைகள்; தங்கள் அரை வயிற்றைக் கழுவிக்கொள்ளவே விதியற்றுக் கிடக்கும் போது, அவர்களின் குழந்தைகளை எங்கே பள்ளிக்கனுப்பிப் படிக்கவைக்க முடியும் அவ்வேழைகள்? ஆனதால் தான் யாவருக்கும் இலவசக் கல்வி வளங்க வேண்டுமெனக் கூறவேண்டிவந்தது. அநேக சுதந்திர நாடுகளிலும் இம்முறை தான் கையாளப்படுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இலவசக் கல்வி முறையைக் கையாண்டால் தான் கட்டாயக் கல்வித் திட்டத்தை திடமாக நிறைவேற்றமுடியும்.

அப்படியே யாவருக்கும் இலவசக் கல்வி முறையால் கட்டாயக் கல்வியையும் நிறைவேற்ற சர்க்கார் முன் வந்து விட்டார்களென்று வைத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகும், நாட்டுக்குதவாத, வாழ்க்கைக்கு ஒத்து வராத. உபயோகமற்ற இன்றையக் கல்வி முறையை மாற்றியமைக்கப்படாத வரையும் நாம் கண்டிப்பாய் முன்னேற முடியாதென்பதும் திண்ணம். ஏனெனில் இன்றையக் கல்வி முறை, நம்மை என்றென்றைக்கும் நிரந்தர அடிமைகளாக்கி, ஆட்சி நடத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு அமைத்தப் பழைய பத்தாம் பசலி அன்னியனாட்சி காலத்தில் அவன் வகுத்த உதவாக் கரைக் கல்வித்திட்டம்.

ஆகையால் நம் நாட்டின் முன்னேற்றத்திற்குகந்த முறையிலும், விஞ்ஞான ரீதியிலும் கல்வி இருப்பதோடு, ஒவ்வொரு மாணவனும் படிப்பை முடித்துப் பள்ளியை விட்டு வெளிவரும் போது, தன்மானமுள்ள சுதந்திர புருஷனாகவும், எத்துறையிலும்

சிறந்த கலைவல்லுனனாகவும், அடுத்த நாட்டின் ஆக்ரமிப்பிலிருந்து தன் நாட்டைக் காக்கும் திறமை வாய்ந்த சிறந்த போர் வீரனாகவும் விளங்கும் தன்மையுள்ள நல்ல சிறந்த கல்வித் திட்டத்தை வகுத்து, அதையும் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் நடைமுறையில் அமுலாக்கமுடியுமோ, அவ்வளவுசீக்கிரம் அமுலாக்கி இம்மாபெரும் கடமையைச் செய்து, கீர்த்திபெறும்படியாக நம் சர்க்காரைப் பொதுஜனங்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சர்க்கார் நிலை, மதுவிலக்குச் செய்ததைச் சரிக்கட்டவே பணம் போதவில்லை என்ற காரணத்தால் பல புதுவரிகள் விதித்தும்- விற்பனை வரி அதிகமாக்கியும் இருக்க. இனி ஜமீனையும் எடுக்கப் போவதால் அந்த ஜமீன்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு பலகோடி ரூபாய் தேவை யிருக்கிறதென்றும் இன்னும் ஏதேதோ பலகாரணங்களைக் காட்டி, அதற்கெனப் பல புது வரிகளைப் போடுவதற்கானத் திட்டங்களைத் தயாரித்துக்கொண்டும், சுதந்திர சர்க்கார் அமைதியான முறையில் நடக்க வேண்டுமென்றால் வரி போடாமல் எப்படி நடக்கமுடியும்? சுதந்திர சர்க்காரில் வரி அதிகமாகத்தானிருக்கும்; அப்பொழுது தான் சுதந்திர சர்க்காரை

[தொடர்ச்சி 21-ம் பக்கம்

சந்தா நேயர்களுக்கு

மாண்புமிக்க சந்தா நேயர்களே! வணக்கம்.

தங்களின், நன்கொடையையும் சந்தா தொகையையும் சடுதியில் சற்று மனம்வைத்து, அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளுகின்றோம். நேரில் வந்தால், வீண் காலதாமதமும் பணவிரயமும் ஆகின்றது என்பது நீங்கள் அறியாததல்ல ஆகவே ஆவன செய்ய மீண்டும் வேண்டுகின்றேன்.

தங்கள் அன்பிற்குரிய,

N. S. அழகர்சாமி,

ஆசிரியர் 'உழவர் நாடு'

செவ்வையான முறையில் நடத்த முடியுமென கனம் சென்னை நிதி மந்திரி கோபால் ரெட்டியாரவர்கள், சட்ட சபையிலும், வெளியில் பல மேடைகளிலும், பலவியாக்கியானங்களால் விளக்கி விரிவுரையாற்றிவரும் இச்சமயத்தில் எங்ஙனம் இந்தப் புதுக் கல்வித் திட்டத்தைச் சர்க்கார் ஏற்று நடத்தப் போகிறார்கள், என்ற சலிப்புத் தட்டுவது உண்மை தான் ஏனெனில் இந்த இக்கட்டான நிலையில் இக்கல்வித் திட்டத்தையும் சர்க்கார் நடத்த முன்வந்து விட்டால் இன்னும் என்னென்ன புது விநோத வரிகளெல்லாம் வந்து விடுமோவெனவும் அஞ்ச வேண்டியிருக்கிறது.

அதற்காக முக்கியமான, அவசியமான, சிறந்ததான, மறுக்கமுடியாத நாட்டின் கண்போன்றுள்ள, கல்வித் திட்டத்தை மறுக்கமுடியுயா எதற்கும் மூலகாரணமாகவுள்ளது கல்வியல்லவா?

எத்தனையோ உதவாக்கரைத் திட்டங்களை வகுத்து, அதற்கென ஒரு இலாகாவையும், பல உத்தியோகஸ்கர்களையும் நியமித்து சர்க்காரின் பல லக்ஷக்கணக்கானப் பணத்தைப் பயனற்ற வகைகளில் வீண்-விரையம் செய்வதை நிறுத்தி, அந்தப்பணத்தை இந்தப் பயனுள்ளதும். மடையனையும் மனிதனுக்கும், மாக்களை மக்களாக்கும், வறிஞனை அறிஞனுக்கும் கல்விக்காக செலவு செய்து நம் சுதந்திர நாட்டின் கௌரவத்தையும், பெருமையையும் காத்து, முன்னேற்றப் பாதையில், நம் தலைவர்களாகிய ஆட்சியாளர்கள் அணிவகுத்துச் செல்லும்படியாக மக்களின் சார்பாக மக்கள் சர்க்காரை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க! மக்கள் சர்க்கார்!! ஜெய் ஹிந்த்.

கெடிகாரம்.

கொட்டும் மழையானாலும், கொடும் வெய்யிலானாலும்
பல்கட்டும் குளிரானாலும், பகல் பொழுதானாலும்
வெட்டும் மின்னலானாலும், வெய்யதோரிருட்டானாலும்
நித்தம் வேலை செய்யும், நானோர் மணிகாட்டி.

'தமிழா முரசு கொட்டு'

(அக்னிதத்)

(கவிதை)

1 சீலமது பெருகத் தெருவில் தமிழ்மணக்க
ஞாலமது புகழ நல்லாசனத் திருந்தே
அருமைத் தமிழகத்தை ஆண்ட நற்றமிழா
அகிலம் புகழ் சென்னை நமதென்று முரசு கொட்டு.

2 காலப் புரட்சியில் கதிகலங்கி வாடாமல்
களங்கமில்லா மனத்துடன் காரிய புத்தியுடன்
அன்னையின் சென்னியே சென்னை நகரென்று
ஆந்திரன் அறிந்திட இன்றே முரசு கொட்டு.

3 இமயம் சென்று யுத்தத்தையும் வென்று
எழில் தமிழ்க் கொடியையும் நாட்டு வித்து
கடாரமும் வென்று ஜெயபேரிகை கண்ட
கன்னித் தமிழா சென்னை நமதென்று முரசு கொட்டு.

4 செக்கிழுத்த வீரன் சிதம்பரம் பிள்ளையையும்
சீர்மிகு கொடிகாத்த தியாகி குமரனையும்
பாரதி, வள்ளுவரைப் பெற்ற தமிழ் நாட்டின்
பார் புகழ சென்னை நமதென்று முரசு கொட்டு.

5 சேரன் செங்குட்டுவன் என்ற தமிழரசன்
சேனைகளைத் திரட்டி வடநாடு சென்றடைந்து
விஜயரை வென்றவழி வந்த செந்தமிழா
வீறுடன் சென்னை ஜெயமென்று முரசு கொட்டு.

6 வீரத்திற்கு உறைவிடமாய் விளங்கும் தமிழ் நாடு
வலிமைமிக்க தாய்மார் வாழும் தமிழ் நாடு
சென்னையை என்றும் ஆந்திரர்க்கு விடோம் என்றே
செறிவுடன் தீந்தமிழா நன்றே முரசு கொட்டு.

மனிதனின் தேவை.

(கவிதை)

"அய்யோ" என்றழுகின்றான் ஆலைத் தொழிலாளி
"குய்யோ" என்று குமுறுகின்றான் குடிசைத் தொழிலாளி
"அம்மா" என்றாற்றுகின்றான் அச்சுத் தொழிலாளி
"அப்பா" என்றழைக்கின்றான் அடிமைத் தொழிலாளி
சம்பளங் கட்டலேன்கிறான் சர்க்கார் குமஸ்தா
கிம்பளமும் வரதில்லே, வழியும் தெரியவில்லே
எப்பக்கம் நோக்கினும் பட்டினி, பசி, பஞ்சம்
என்னப்பன் "குமரா" நீயேதான் தஞ்சம்
சம்பளமும் கூடவேணும், சரியான லீவுவேணும்
உண்ண உணவு வேணும், உடுக்க உடை வேணும்
இருக்க இடம் வேணும், படுக்கப் பாய் வேணும்
எல்லோரும் சமமென்ற கொள்கை பரவவேணும்

பல்லாண்டு.

பல்லாண்டு, பல்லாண்டு, பண்டையோர்க்குப் பல்லாண்டு
கத்தியின்றி, ரத்தமின்றி, போர் புரிந்தவர்க்குப் பல்லாண்டு
அடிதடியின்றி, அமர்களமின்றி, அன்பை வளர்த்தோர்க்குப் [பல்லாண்டு
மாசிலா மாதவமியற்றி, மண்ணுண்ட வாசர்கட்குப் [பல்லாண்டு
பக்தியுடன் பண்பட்ட அன்புமழைபொழிந்தோர்க்குப் [பல்லாண்டு
சுத்தியுடன் சுயராஜ்யம் வாங்கித்தந்தவர்களுக்குப் [பல்லாண்டு

அஹிம்சை அவனியில் அங்குமிங்கும் தான் பரவ
மஹிமையுள்ள மேனியினை ஈந்தவர்க்கும்
சத்தியமாம் ஜெகஜ்ஜோதி செகத்தினில் செழிக்கவே
நித்தியமும் தொண்டு செய்யும் நிருபனுக்கும்
தன்னலங்கருதாது தாய் நாடதனுக்குழைத்த அண்ணல்
அருள் காந்திஜியின் அன்பாள பொன்மொழிகள்
[அனைத்துக்கும் பல்லாண்டு

K. S. G. Aiyyangar,

கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்கம்,

அறிவிப்பு.

கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்கத்திலிருந்து ரெட்டிகுல ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உதவியை விரும்பும் ஏழை மாணவர்கள் (4-வது பாரம் முதல் பி. ஏ. வரை படிக்கும் ஏழை மாணவர்கள்.) சங்கத்திலிருந்து அச்சுப் பாரத்தில் பூர்த்தி செய்து 31—1—50ங் தேதிக்குள், கீழ்க் கண்ட விலாசதார்களில் யாரவது ஒருவருக்கு அனுப்ப வேண்டுமாய் அறிவிக்கப்படுகிறது. 0—2—0 அணு ஸடாம்பு அனுப்பி பாரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:

S. சிங்கப்ப ரெட்டியார், B. A., B. T.
கௌரவ காரியதரிசி.
C/o அப்பன் அன் கோ. விருதுநகர்.

or

N. S. அழகர்சாமி ரெட்டியார்,
கௌரவ காரியதரிசி,
முத்துராமலிங்கபுரம், கல்லூரணி P. O.
(Via) அருப்புக்கோட்டை.

பாராட்டுகின்றோம், அதுமாத்திரமா? :: :: மகிழ்ச்சியும் அடைகின்றோம்,

சென்னை மாகாண மேல், கீழ் சபையின் மெம்பராக இருந்தவரும், நமது சமூகத்தின் தலைசிறந்த தலைவராகவும், தீவிர காங்கிரஸ் வாதியாகவுமிருந்த காலஞ்சென்ற அகத்தாபட்டி திரு. **A. K. A. இராமச்சந்திர ரெட்டியார் அவர்களின்** எஸ்டேட் சம்பந்தமாக இருந்த கோர்ட்டு விவகாரங்கள், மத்தியஸ்தரிகளின் முடிவுப்படி முடிவடைந்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். இதில் தீவிர பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் நமது பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

N. S. அழகர்சாமி,
ஆசிரியர் ('உழவர் நாடு')

உ

கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்க காரியக்கமிட்டி கூட்டம்

திருப்பரங்குன்றம்.

1949ம் வருடம் டிசம்பர்மீ 3உ பிற்பகல் 2-மணிக்கு திருப்பரங்குன்றம் நம்குல மடத்தின் மேல் மாடியில் சங்கத் தலைவர் வள்ளியூர் திரு S. S. சங்கம ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன.

1. வரவு செலவு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. திருப்பரங்குன்றம் நம்குல மடத்தின் முன்னால் இருக்கின்ற கிணற்றுக்கும், பேட்டைக்குள் இருக்கின்ற கிணற்றுக்கும் கைபிடிச் சுவர் எடுத்து, பிளாட் பாரம் போடவும், இன்னும் மடசம்பந்தமான சில்லரை ரிப்பேர் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

3 நமது சங்கத்தின் காரியக்கமிட்டி அங்கத்தினர்களான, திருவாளர்கள் S. S. சங்கம ரெட்டியார், P. L. K. சுப்பா ரெட்டியார் ஆகியவர்கள் முறையே இராமநாதபுரம், மதுரை ஜில்லா போர்டிற்கு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப் பெற்றமைக்கு, இச்சங்கம் தனது வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறது.

4 நமது குல ஏழை மாணவர்களுக்கு (4-வது பாரத்திலிருந்து B. A. வரைக்கும் படிக்கும் மாணவர்கள்.) 1949-50 வருஷத்திற்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க இக் கமிட்டி தீர்மானிக்கிறது.

அன்றையக் கூட்டத்திற்கு விஜயம் செய்த காரியக்கமிட்டி மெம்பர்களின் ஜாபிதா:-

தலைவர்: திரு S. S. சங்கம ரெட்டியார், வள்ளியூர்.

உபதலைவர்: P.V.A. வெங்கிடசாமி ரெட்டியார், ம. ரெட்டியபட்டி

கௌரவ காரியதரிசிகள்:
S. சிங்கப்பன் B. A.: B. T. விருதுநகர்.
N.S. அழகர்சாமி, முத்துராமலிங்கபுரம்.

பொக்கிஷதார்: கா.சு.நா.நா. நாரயண ரெட்டியார், பெ. புதுப்பட்டி

கா. மா. வாலகுருவா ரெட்டியார், அ. ரெட்டியபட்டி.

காசி. சோ. சொக்கப்ப ரெட்டியார், சித்தி ரெட்டியபட்டி.

கோ. அ. கோபாலகிருஷ்ண ரெட்டியார், சேவல்பட்டி.

உங்களுக்குத் தெரியுமா?

(தொகுத்தோன்: சீனிச்சாமி)

1 பாதையில் படிந்திருந்த குதிரைக் குளம்பின் சுவடுகளைக் கண்ட பின்பே ஜான்கூடன்பர்க் என்பவர் யோசனை செய்து அச்சு எழுத்துக்களைக் கண்டு பிடித்தார்.

2 உலகத்திலே பெரிய பாலம் டேபிரிட்ஜ் (Day Bridge) இதன் நீளம் இரண்டு மைல்.

3 மரத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்ட பின்பே ஸர். ஐசக்நியூட்டன் என்பவர் பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டென்று கண்டுபிடித்தார்.

4 கேவலம் உலைநீர் கொதித்து பாத்திரத்தின் மூடியை நீராவி வெளியே தள்ளியதைக் கண்ட பின்பே ஜேம்ஸ் வார்ட் என்பவர் நீராவி யந்திரத்தைக் கண்டு பிடித்தார்.

5 கைக் கெடியாரங்கள் முதலில் ஜெர்மன் தேசத்திலுள்ள நூரம்பர்க் என்னுமிடத்தில் 1477ல் கண்டு பிடிக்கப்பட்டன.

6 தைக்கும் ஊசி முதன் முதலில் 1545ம் வருஷம் கண்டு பிடிக்கப்பட்டது.

7 தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலாவதாக 159ம் வருடம் கண்டு பிடிக்கப்பட்டது.

8 உலகத்தில் பெரிய பார்க் 'Yellow Stone Park' என்பதே இதன் விஸ்தீரணம் 3000 சதுர மைல்களாகும்.

9 1¼ செக்கண்டில் வெளிச்சமானது சூரியனிடமிருந்து பூமிக்கு வந்து சேர்கிறது.

10 எம்பயர் ஸ்டேட் பில்டிங் (Empire State Building) தான் உலகத்திலே மிகப்பெரிய கட்டடமாகும். இதன் உயரம் 1248 சதுரடியாகும் சுமார் 105 மெத்தைகள் உண்டு, இக் கட்டிடம் நியூயார்க்கில் உள்ளது.

(தொடர்ச்சி 29-ம் பக்கம்)

பார்முழுதும் ஏர் முனையிலே!

கல்லூரணி வி அருணாசலம்.

ஆம். பார் முழுதும் ஏர் முனையில்தான். கத்தி முனையில் அல்ல. ஈட்டி முனையில் அல்ல. போர் முனையில் அல்ல. பேனா முனையிலும் அல்ல. எள்ளளவும் சந்தேகமின்றி ஏர் முனையில்தான்.

கத்தி முனையால் கயவர்களை வென்று களிப்புற்றிருக்கலாம். ஈட்டி முனையால் எதிரிகளைக் கொன்று இன்புற்றிருக்கலாம். போர் முனையால் புல்லர்களைப் புறமுதுகிட்டோடச்செய்து புன் முறுவல் பூக்கலாம். நாடு பிடிக்கலாம். உலகை ஆளலாம். அதேசமயத்தில் உலகை அழிக்கவும் செய்யலாம். பேனா முனையால் அறிவை வளர்க்கலாம். அஞ்ஞானத்தை அகற்றலாம். அட்டகாசச் செயல்களை அம்பலப் படுத்தலாம். ஆட்சி பீடத்தின் குறைகளைக் குத்திக் காட்டலாம். ஆண்டிமுதல், அரசன் வரை நீதி ஒன்று. பேதம் இல்லை சாதி ஒன்று சமயம் இல்லை என ஜெயபேரிகை கொட்டலாம். புத்தம்புதுக் கொள்கைகளையும், தத்துவங்களையும் மக்களுக்குப் புரியவைக்கலாம். மேற்கூறிய முனைகள் அனைத்தும் சாதிக்க முடியாத ஒன்றினை ஏர் முனை சாதிக்கிறது. அதுதான் பாரைப் பராமரித்தல். மற்ற முனைகளால் என்னென்ன செய்ய இயன்றாலும், பாரைப் பராமரிக்க ஏர் முனையைத்தவிர, வேறு எம் முனைகளாலும் இயலாது என்பதை இறுதிட்டுக் கூறலாம்.

உலகமே ஏர்முனையைத்தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது என்பது "சுழன்றும் ஏர்பின்னது உலகம்" என்பதிலிருந்து நன்கு புலனாகும். ஆதாவது உழவனது உழைப்பையும், உருபலனையும் கொண்டே உலகம் உழல்கின்றது. கட்டிடத்திற்கு எங்ஙனம் அஸ்தி வாரம் ஆதாரமோ, மரத்திற்கு எங்ஙனம் ஆணி வேர் ஆதாரமோ அதே போல் உலகம் உய்வதற்கு, தழைத்தோங்குவதற்கு ஏர் முனை ஆதாரமாகின்றது. அப்பேர்ப்பட்ட பொறுப்பு

வாந்தவர் முனை இன்றய சூழ்நிலையில் எவ்வாறிருக்கின்றது? சீரான நிலையில் இருக்கின்றதா? அன்றி சீர் கெட்ட நிலையில் இருக்கின்றதா? சீர் கெட்ட நிலையில்தானே இருக்கின்றது. ஏன்? காரணம் என்ன?

ஏர் முனையைச் செலுத்தும் ஏரான் (விவசாயி) உழைத்து உழைத்து உருக்குலைந்திருக்கின்றான். பாடுபட்டுப் பாடுபட்டுப் பரிதாப நிலையில், பயங்கர நிலையில் காட்சியளிக்கின்றான். நாள் தோறும் சலியாதுழைத்து, நலிந்து, நடைப்பிணமாகத் தோற்றமளிக்கின்றான். அவனுக்கு உண்ணத்தான் உணவுண்டா வேளா வேளைக்கு உடுக்கத்தான் உடையுண்டா? இருக்கத்தான் இடமுண்டா? இம்மூன்று கேள்விகளுக்கும் என்ன பதிலைத் துணிந்து கூறுவது.

உண்ணக் கூழ்தான். ஆனால் உப்பில்லை. உடுக்கக் கந்தை உடைதான். ஆனல் தூய்மை இல்லை. இருக்கக் குச்சில் வீடுதான் ஆனல், மழையும், வெயிலும், பனியும் பயமின்றிப் படை எடுக்கும். தலைக்கு எண்ணெய் உண்டா? எண்ணெய் கண்டு இரண்டுமாத காலமிருக்கும். ஆனல் நமக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் தந்து உதவுவது யார்? அப்பரம தரித்திரனாகக் காட்சிதரும் பாட்டாளியன்றோ! பின் ஏன் அவனுக்கு அந்த சவுகரியங்கள் எல்லாம் இல்லை? பதில் எங்கே?

உழைப்பவனுக்கேற்ற ஊதியம் நாம் கொடுப்பதில்லை ஏன்? நம் சர்க்காரே கொடுக்க மறுக்கின்றதே! காலமெல்லாம் கண்-துஞ்சாது, இரவு, பகலில்லாமல் கஷ்டப்பட்டு உழைக்கும் உழவன் நெல் நடுகின்றான் சர்க்கார் கண்மாயிலுள்ள தண்ணீரை ஆதாரமாக கொண்டு. உழுது, தொளி அடித்துப் பரம்புதடவி, நட்டு, காலாகாலத்தில் களை எடுத்து, உரங்களை நன்ருகப் போடுகிறான். பயிர் நன்ருக இருக்கின்றது என்பதைக் காணும் போது உச்சி முதல் உள்ளங்கால் வரை உளம் பூரிப்படைகின்றான், 'வெண்ணெய்திரண்டு வரும்போது தாளி உடைந்தாற்போல்'' அறுவடைக்கு ஒரு மாதம் இருக்கும் போது கண்மாயில் தண்ணீர் வற்றிவிடுகின்றன. பக்கத்தில் உள்ள கிணறுகளில் இருந்து

இரவெல்லாம் கண்விழித்திருந்து இறைக்கின்றான். இப்படியாகப் பாடுபடும் பஞ்சை, அப்பாட்டாளி, புள்ளிபார்க்க வரும் உத்தியோகஸ்தரைப் பார்த்துப் புலம்புகின்றான், தான் கஷ்டப்பட்ட நிலை எல்லாம் எடுத்துக் கூறுகின்றான். ஆனால் அவனுடைய புலம்பலுக்கு செவிசாயாமல் செல்லுகின்றார் உத்தியோகஸ்தர், பின் அறுவடையன்று அங்கலாய்த்துக் கொள்ளுகின்றான், ஏன்? ஆறுயாத காலமாக உழைத்து, கண்மாய் சர்க்காருக்குச் சொந்தமானது என்பதற்காகச் சரிபாதி நெல்லை, கழனியிலே, அவர்கள் முன்னிலையில் பகிர்ந்து கொடுத்து விட்டு வந்துவிடுகின்றான். அப்போது எவ்வாறிருக்கும் அவன் உள்ளம். உடைந்து, சுக்கு நூறாகத் தகர்ந்து விடாதா! ஆகவே உலகம் உய்யவேண்டுமானால், பாரெங்கும் பசிப்பிணி ஒழிய வேண்டுமானால், மக்கள் இன்புற்றிருக்க வேண்டுமானால், உழவனது நிலையில் ஓர் புரட்சி, அதாவது மறுமலர்ச்சி ஏற்படல்வேண்டும். முதன் முதலில் பஞ்சைகளுக்கு தீர்வையை வசூலிக்க சர்க்கார் சட்டம் கொண்டு வரவேண்டும். (தொடர்ச்சி 30-ம் பக்கம்.)

26-ம் பக்கம் தொடர்ச்சி-

11 உலகத்திலே நீளமான நதி மிஸெரிமிஸ்சிபியாகும். உலகத்திலே அகலமான நதி அமேஸான்தான்.

12 உலகத்திலே பெரியமலை இமயமலை. இதன் உயரம் சுமார் 5 மைல்.

13 உலக மானிடர்களில் மகாத்மா என்ற பட்டம் பெற்றவர் நம் இந்திய அரசியல் இயக்கத் தந்தையும், சுதந்திரக் கோயிலின் சிற்பியுமான மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான்

14 North, East, West, South என்ற நான்கு திசைகளில் முதல் எழுத்துக்களான N. E. W. S. எல்லாம் ஒன்று சேர்த்தே News (பத்திரிகை செய்தி) ஏற்பட்டது.

15 உலகத்திலே பெரிய நாடு, பெருமைவாய்ந்த நாடு எது? நம் "உழவர் நாடு" தான். இது மண்ணைக்கிண்டி மக்களைக் காக்கும் ஏழை உழவர்கள் சார்பில் நின்று உரிமைப் போர் நடத்துகிறது. இதன் ஆசிரியர் திரு N. S. அழகர்சாமி தான். உழவர் நாடு உங்களைத்தேடிவர எங்கேஇன்றே ரூ 2—0—0 மணியார்டர் செய்வீர்கள் என நம்புகிறேன்.

29-ம் பக்க தொடர்........

உழைப்புக்கேற்ற ஊதியம் பெற, உழைப்பாளிகளுக்கு வசதி செய்துதரல் வேண்டும். உழுபவனுக்கே நிலம் என்பதாக சட்ட ரீதியாகக் கொணர வேண்டும். அதாவது பன்னிரெண்டு ஆண்டுகள்ாக ஒருநிலத்தை ஒருவர் வாரத்திற்கு உழுதால் பன்னிரெண்டாது வருடத்தில் அந்நிலம் அவ்வாரதாரியைச் சார்ந்தது என்பதாக, நம்மாகாண முன்னுள் முதலமைச்சர் கனம் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் கூறுவதை சட்ட பூர்வமாக நம் மந்திரிசபை ஒப்புக்கொண்டு, உழவர்கள் நிலையை மாறுபாடடையச் செய்யவேண்டும். இதை உடனடியாகச்செய்ய சென்னை சர்க்கார் முன் வருமா?

அடுத்தபடியாக உழவின்றி விளைவில்லை. விளைவின்றி வாழ்வில்லை. என்பதையும்"

உழவினல் விளைவு உயரும்,
விளைவு உயர்ந்தால் உழவன் உயர்வான்,
உழவன் உயர்ந்தால் உலகம் உய்யும்"

என்பதையும் உலகறியச் செய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட கருத்து நாட்டில் பரவிவரும் நாளே நமக்கு நன்னுள்! ஒரு பொன்னுள்!! புனிதமாகப் போற்றப்படவேண்டிய நாள்!!!

உலக சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய புனிதநாள்!!!!

ஆகவே உழவன் நிலைமாற மறுமலர்ச்சி தேவை என்றும், அத்தேவையைப் பூர்த்தி செய்வதில் வெகுவாகக் கவனிக்க வேண்டிய பொருப்பு நம் சென்னை சர்க்காருக்கும், அடுத்தபடியாக உழவனது நலத்திற்கென்றே 'மலர்ந்துள்ள உழவர் நாட்டின் பணிஎன்றும் சொல்லி, அப்பணியை விரைந்து செய்யும்படிக்கும் மிகப்பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வாழ்க உழவர் நாடு! வளர்க அன்னுர் தொண்டு!! ஓங்குக உழவர் நிலை!!!

Regd No. M. 5478

★ "உழவர் நாடு" ★

(மாதப் பத்திரிகை.)

வருஷ சந்தா விபரம்.

ராஜ போஷகர்	ரூ	100
போஷகர்	ரூ	50
விசேஷ ஆதரவாளர்	ரூ	25
ஆதரவாளர்	ரூ	10
ஸ்பெஷல் சந்தா	ரூ	2
சாதாரணச் சந்தா	ரூ	2
தனி இதழ்		0—2—0

"வியாபாரத்திற்கழகு விளம்பரப்படுத்துதல்"

விளம்பர விகிதம்.

அட்டை வெளிப்புறம்	ரூ	50
,, உட்புறம்	ரூ	30
உள் ஒரு பக்கம்	ரூ	25
½ பக்கம்	ரூ	15

நீடித்த விளம்பரத்திற்கு எழுதியறிக.

மாதிரி பிரதிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

'உழவர் நாடு' காரியாலயம்,
முத்துராமலிங்கபுரம்.
கல்லூரணி P. O. (Via) அருப்புக்கோட்டை.

ஸ்ரீ சக்தி பிரஸ், அருப்புக்கோட்டை. 49